**சேருவில பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சேருவில பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேருவில பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தியுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.6 இணங்காமைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 பிரிவு | சபையினால் நிர்மாணிக்கப்படட பாதைகளை இன்வென்றியிற்கு உட்படுத்தி இருந்ததுடன் அந்த அனைத்து பாதைகளையும் வரர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனைத்து பாதைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 126 பிரிவு | சபையிற்கு வருமானம் ஈட்டக்கூடிய வகையில் துணை சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் புதிய வருமான வழிகளை ஏற்படுத்தக் கூடிய துணை சட்டங்களை தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 134 பிரிவு | சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை சரியாக காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி மற்றும் வரிகளை விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதென. | - மேற்படி - |
| (ஆ) | 1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் விரசுறிக்கப்பட் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | | | |
| (i) | 59 ஆம் விதி | ஓவ்வொறு வருட ஆரம்பத்திலும் சபை அதிகார பிரதேசதில் காணப்படும் வியாபாரம் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பான கணிப்பீடொன்றை மேற்கொண்டு வியாபார அனுமதிப் பத்திர வருமானத்தை திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரியவாறு நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 218 ஆம் விதி | கிரயம் ரூபா 135,817,130 ஆன காணிகள் மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறை கணிப்பீடு செய்திருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் கணிப்பீட்டிற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்கம் கொண்ட தேசிய | செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப் பத்திரமொன்று | அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் | தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றாடல் சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட வர்த்தமானி ஏற்பாடுகள் | இன்றி வியாபாரங்களை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | கொள்ளாத நிறுவனங்களிற்காக தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுப்பதென. | வர்த்தமானி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கை | ஒவ்வொறு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றை சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,082,224 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,803,721 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வாடகை | 5,646 | 7,093 | 6,923 | 1,033 | 5,346 | 3,819 | 2,956 | 863 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 845 | 717 | 717 | - | 695 | 706 | 706 | - |
| ஏனைய வருமானம் | 14,900 | 17,108 | 13,686 | 5,138 | 14,163 | 12,757 | 11,041 | 1,716 |
| தொகை | **21,391** | **24,918** | **21,326** | **6,171** | **20,204** | **17,285** | **14,703** | **2,579** |

### 2.2.2 வருமானத்தை சேகரிப்பதற்கான செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல ஆண்டுகளாக நிலவிவரும் நிலுவை கடைவாடகை, நிலுவை நீதிமன்ற தண்டப்பணம், நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிட போதிய கவனத்தை செலுத்தி இருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சேரநுவர நகரில் தினந்தோறும் 300 கிலோ கிராமான கழிவுப் பொருட்கள் திரட்டப்பட்ட போதும் அதற்காக கட்டணம் அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | தேவையான முயற்சிகளை பின்பற்றி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | வருமானத்தை வளர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதான 28 விடயங்களை நிரைவேற்ற துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையும் துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்காததுடன் மாகாண சபையினால் அறிமுகப்படுத்திய 05 துணைச் சட்டங்களை ஏற்றிருந்தது. அவ்வாறாயினும் ஏற்றுக் கொண்ட துணைச் சட்டங்களிற்கு இடையே அறவித்தல் பலகைகளுக்காக கட்டணம் அறவிடுவதற்கான துணை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்காததால் நடைமுறை ஆண்டினுள் அறவிடப்பட்ட கட்டணம் எதுவும் இருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை கடமைகளிற்கிடையில் பிரதான கடமையாக அதிகார பிரதேசத்தினுள் மேற்கொள்ளும் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதும் 2022 ஆண்டு மற்றும் 2023 ஆண்டுகளில் முறையே அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் 02 மற்றும் 03 மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் சபையின் அனுமதியற்ற நிர்மாணங்கள் எதுவும் | அனுமதியற்ற நிர்மாணங்களை பரீட்சித்து உரியவாறு நடவடிக்கை எடுப்பதென. | காணி அபிவிருத்தி செய்ற்பாடுகளை முறையாக்க வேண்டும். |

வெளிப்படுத்தியிருக்காததால் இந்த கடமைகள் நல்ல முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 02/2017 கொண்ட 2017 திசெம்பர் 21 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் சேருவில பிரதேச சபைக்கு கிடைத்த மற்றும் சபையினால் தற்போது பயன்படுத்திவரும் ரூபா 41,388,101 பெறுமதியான 13 வாகனங்கள் கணக்காய்வு திகதியன்றும் சபையின் பெயரில் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை சுவீகரிக்க நிதிரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அந் நடிவக்கைகளை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்கள் முகாமைத்துவத்தை முறையாக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தும் பெறுமதி ரூபா 53,412,112 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை பெற்றுக் கொள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்த போதும் குறித்த அரச நிறுவனத்தினால் சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அச் செயற்பாடுகளை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்கள் முகாமைத்துவத்தை முறையாக்க வேண்டும். |
| (இ) | பிரதேச சபையினால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 19,000,000 ஆன கிரயத்தை மேற்கொண்டு நிர்மாணித்த சுடலை மீளாய்வாண்டிலும் எவ்வித பயன்பாடும் இன்றி காணப்பட்டது. சாத்தியப்பாட்டு ஆய்வு இல்லாமல் தேவைப்பாட்டை இனங்காணாது நன்றாக திட்டமிடாத காரணத்தால் இந்த சுடலை குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. சுடலைக்கு பிரவேச பாதை போன்றே அண்டிய பகுதிகள் நீரில் மூழ்கி காணப்பட்டமை மற்றும் சுடலையின் புகை குழல் மேல் ஆகாயத்திற்கு உயரம் இல்லாததன் மீது அது பயன்பாட்டிலிருந்து விலகியிருந்தது. இவ்வாறு நிர்மாணத்தல் பொறியியல் தொழிநுட்ப வலுவொன்றை போன்றே அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்கள் நீண்ட கால திட்டமொன்றின் பிரகாரம் மேற்கொள்ளாததன் விளைவாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. மேலும், நவீன நுட்ப முறையை பயன்படுத்தி இதனை செயற்படு | சுடலையின் நவீனமாயமாக்கல் நடவடிக்கைகளிற்காக மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்ளவும், எதிர்காலத்தில் அதனை திருத்துவதற்காக கருத்திட்ட முன்மொழிவொன்றை சமர்ப்பித்து நிதி வளத்தை பெற்றுக் கொள்ள கவனம் செலுத்துவதென. | குறை பயன்பாட்டு சொத்துக்களை பயன்படுத்தக் கூடியவாறு நன்றாக திட்டத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலைக்கு உருவாக்கிக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | | |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையை கவனத்திற் கொள்கையில் 11 பதவிகளில் 14 வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இந்த வெற்றிடங்களை விரைவில் நிரப்ப அல்லது அங்கீகார பதவியணியினர் அளவை மீண்டும் திருத்திக் கொள்ளவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பதவி வெற்றிடங்களை நிரப்பிதருமாறு கோரிக்கை செய்துள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வொன்றை இஸ்தாபித்திருந்ததுடன் அந் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. உள்ள கணக்காய்வு திட்டத்தை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அங்கீகாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மேற்கொண்ட கணக்காய்வு பணிகள் தொடர்பான அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | சபையின் வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்திற்காக முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும். |

### 4.2 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம், செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமானம், செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 04 வருமான விடயங்களில் 9.34 சதவீதம் முதல் 600.97 சதவீதம் வரையும், 03 செலவின விடயஙகில் 19.28 சதவீதம் முதல் 26.42 சதவீதம் வரையும் விலகல் காணப்பட்டது. | பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க கவனம் செலுத்துவதென. | பாதீட்டை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும். |

### 4.3 சுற்றாடல் பிரச்சினை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரகாரம், திரட்டும் குப்பைகளை வகைப்படுத்தாது திரட்டுதுதல், அவைகளை சுதந்திரமாக வெளியிடல், மீள்சுழச்சி செயல்முறையை தொடர்ந்து செய்யாமை, அதிகார பிரதேசத்திற்க உகந்த வெளியிடும் பொறிமுறையொன்றை பின்பற்றாதமை ஆகிய காரணங்களால் வன சீவராசிகளால் கழிவு பொருட்கள் நுகரப்படல் மற்றும் உக்காத குப்பைகள் பிரதேசம் பூராவும் சிதறிக் காணப்பட்டன. | ஏதிர்காலத்தில் இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | தேசிய சுற்றாடல் சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மனிதர்களினால் பொடுபோக்காக மேற்கொள்ளும் கழிவுகள் வெளியிடலை ஒழுங்குபடுத்தாமை மற்றும் சரியான அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படும் நிர்மாணங்களிற்கு தலையிடாமை காரணங்களால் மழையுடன் கூடிய வாநிலை நிலைமைகளில் நீர் வடிந்தோடாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. மேற்குறித்த விடயங்களின் காரணமாக எதிர்காலத்தில் அநேக சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படும் இடப்பாடு காணப்பட்டன. | இது தொடர்பாக கவனம் செலுத்தி எதிர்காலத்தில் தேவையானவாறு நடவடிக்கை எடுப்பதென. | கழிவுகளை வெளியிடலை நன்றாக ஒழுங்குபடுத்த வேண்டும். |